சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – பகுதி II திட்டம் 2010–2011 – திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தின் அருகே கருப்பாநதி பாசனத் திட்டத்தின் கீழ் கருப்பாநதி நீர்த்தேக்கத்திற்கு செல்லும் அணுகுச் சாலையை சீரமைக்கும் பணியை 2010–2011ம் ஆண்டிற்கு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துதல் – ரூ.50.00 இலட்சம் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (ப்பி 2) துறை

அரசாணை (நிலை) எண் 158

நாள் 27.05.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி 13

படிக்கப்பட்டது:

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) கடித எண் எப் / 7575 / பகுதி II / 2010-2011, நாள் 27.01.2010.

ஆணை:

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில், கருப்பாநதி நீர்த்தேக்கம் அமைந்துள்ளது. இந்நீர்த்தேக்கம் மண் மற்றும் கல்லணையால் அமைக்கப்பட்டு, 840 மீட்டர் நீளமும், 72 அடி உயரமும், 185 மில்லியன் கனஅடி கொள்ளளவும் கொண்டது. இந்நீர்த்தேக்கம் மூலமாக 1552 ஏக்கர் நிலங்கள் நேரடிப் பாசனமும் மற்றும் 7693 ஏக்கர் நிலங்கள் மறைமுகப் பாசனமும் பெறுகின்றன. அப்பகுதியிலுள்ள 72 ஏரிகளுக்கும் இந்நீர்த்தேக்கம் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. கருப்பாநதி நீர்த்தேக்கம் கட்டும்போது, மதுரை–தென்காசி NH-208 சாலையில் சொக்கம்பட்டி கிராமத்திலிருந்து சுமார் 8 கி.மீ நீளத்திற்கு தார் சாலை அமைக்கப்பட்டு இருந்தது. இதில் L.S. 0 முதல் 6500 மீட்டர் வரையிலான சாலை மழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக பழுதடைந்துள்ளது. தார்சாலை மோசமானதால் ஏற்கனவே சென்று வந்த அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்தும் தற்சமயம் செல்லமுடியாமல் நின்றுவிட்டது. அப்பகுதி மக்களும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். சாலை மோசமாக உள்ளதை சரி செய்யுமாறு ஆய்வுக்கு வந்த அணைகள் பாதுகாப்பு பொறியாளர்களும் கருத்து தெரிவித்தார்கள். எனவே, சொக்கம்பட்டி கிராமத்திலிருந்து கருப்பாநதி நீர்த்தேக்கம் வரை 8.00 கீ.மீ தூரத்திற்கு தார்சாலை அமைக்க 2010–2011ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டுத் தொகை 2010–2011ம் ஆண்டில் ரூ.50.00 இலட்சமாகும். இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது.

2. மேற்கண்ட திட்டத்தினை 2010–2011ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தின் அருகே கருப்பாநதி பாசனத் திட்டத்தின் கீழ் கருப்பாநதி நீர்த்தேக்கத்திற்கு செல்லும் அணுகுச் சாலையை ரூ.50.00 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) செலவில் சீரமைக்கும் பணிக்கு 2010–2011ம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லறைச் செலவினம், சிறு மேற்பார்வைச் செலவுகள் மற்றும் எதிர்பாராச் செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின்கீழ் ஏற்படும் மொத்தச் செலவுகள், மொத்தப் பணி

(Works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

3. மேலும், இத்திட்டப் பணிக்கான செலவினம், மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை விட எக்காரணம் கொண்டும் அதிகரிக்கக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“4702 00 சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு – 101 மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JA சிறுபாசன சிறப்புத் திட்டம் – 16 பெரும்பணிகள் (த.தொ.கு 4702 00 101 JA 1607)”

5. மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் 17.05.2010 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண் 25482 / பொ.ப. II / 2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (ஏ&இ), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை 1), சென்னை–18.
நகல்
நிதித் (பொ.ப. II/வ.செ (பொது II) துறை, சென்னை–9.
பொதுப்பணித்(சி.பா.1)துறை, சென்னை–9 (5 நகல்கள்).

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்